## திரு வல்லிக்கேணி

# பார்த்த சாரதி

## மாலை



கோள்டன் பிரஸில் பதிப்பிக்கப்பெற்றது.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

திருவல்லிக்கேணி,

# பார்த்தசாரதிமாலை.

## கடவுள்வணக்கம்.

### வெண்பா.

திருவல்லிக்கேணிவளர் ஜெயபார்த்த சாரதிமேல்
பருநல்லசீதிதமிழ் பாடுதற்கு—குருவல்லி
தருணமிதுகாக்கச் சௌரி தமிழ்விளங்கக்
கருணைபுரி வேங்கடத்தான் காப்பு.

## நூன்முகம்.

### எழுசீரடி யாசிரியவிருத்தம்.

ஒருவனே தெய்வமல்லால் வேறேயில்லை உயிரெல்லாம் ஒன்றுமே யுற்றுப்பார்த்தால், கருவிடமே விற்றுமுதலுலகமாச்சு கதிரவனால் வுலகமெலாம் விளங்கி நிற்கும், உருவானநவக்கிரக மிருபத்தேழி லுள்ளபடி நடக்குமல்லால்வேறேயில்லைப், பரிமளமே திருவல்லிக்கேணி வாழும் பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே. 1

ஈயாமல் வாழ்ந்தாலும் சுகமுமில்லே இவ்விடந்தை விட வேறேயிடமுமில்லே, வோயாமற் பொய்யுரைத் தாற் சுகமுமில்லே யூருடனே பகைத்தாலும் உயிர்க்குச் சேதம், தீயாகமூளுமினி வனித்தியத்திற் றெளிந்தோ ரைச் சார்ந்திடிலோ வணுகிடாது, பாயாருந் திருவல்லி க்கேணிவாழும் பார்த்தனிடசாரதியைப் பணிகுவாயே.

பெருமைபடைத் தோர்க்குவரும் பகையுமில்லேப் பொய்யுரையா மாந்தர்கட்குப் பாவமில்லே, யறிவுடனே நடப்பவர்கட் கிகட்சியில்லே யடங்கிநின்ற மானவற்கு நிந்தையில்லே, மறுமுகத்தைப் பாராற்கு வினேயுமில்லே, பருவமுள்ள திருவல்லிக்கேணிவாழும் பார்த்தனிடசா ரதியைப் பணிகுவாயே. 3

கொண்டவனே மதியாமற் பேசும்பெண்டு குடிக்கி யெமனவளேவிட வேறேயில்லே, பெண்டிரண்டு கொண் டாலுஞ்சுகமுமில்லே பெருநெருப்புச் சாகளவுந் துக்கந் துக்கம், அண்டிநின்ற விடமதனில் மோசஞ்செய்தால் ஆயுசுள்ளவரைக்குமவ ரலேவாரப்பா, பண்டுமறை திரு வல்லிக்கேணிவாழும் பார்த்தனிட சாரதியைப் பணிகு வாயே. 4

அரியதனேப் பணியாத ஜென்மமெல்லாமவலமதே எடுத்ததினம் பூமிபாரம், மருவுமன்பர் தனக்கிடாந்

துரோகஞ்செய்தால் மறுபடியுங் கடைத்தேறு மார்க்க
மில்லை, வுறுகிமிக வுறவாடு மோசக்கார ருற்றதுணையெ
ன்றவரை நம்பொண்ணாது, பாவிவளர் திருவல்லிக் கேணி
வாழும் பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே. 5

உதயத்தின் வெய்யதனிற் காயும்பேருமுத்தமரை
க்கண்டுதுதி யாதபேரும், மதியகன்று மூத்தவளைச்சே
ர்ந்தபேரு மன்னுசுடலைப்புகையி னின்றபேரு, மதிகா
விற் பாலன்னமுண்டபேரு மாயுள்விர்த்தி யின்றுமிகக்
குறைந்துபோவார், பதியான திருவல்லிக்கேணிவாழும்
பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே. 6

சந்திகா லத்தில்வெய்யிற் காயும்பேருஞ் சற்குண
ரைக்கண்டு துதிசெய்தபேரும், அந்தமிகு மில்லாளைச்
சேர்ந்தபேரு மன்னிரவிற் பாலன்ன முண்டபேருஞ்,
சிந்தைமகி ழோமபுகை பட்டபேருஞ் சிரஞ்சீவி யாயுல
கில் விர்த்தியாவார், பந்தமுறுந் திருவல்லிக்கேணி வா
ழும் பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே. 7

வலிமையுள னேழைபொருள் பறிக்கொண்ணாதுவழ
க்கிருக்க வழக்கொன்றும் பேசொண்ணாது, யெளியாரை
யெதிரிட்டுக் கொள்ளொண்ணாது யேற்பவரை யுதாசின
மாய்ப் பேசொண்ணாது, சலியாததூர்த்தர்களைச் சேரொ

ணாது சற்குருவின் வாய்மொழியைத் தள்ளொணாது பலிதலருந் திருவல்லிக்கேணிவாழும் பார்த்தனிடசாரதியைப் பணிகுவாயே. 8

அங்காடி கூடைகளைப் பறித்துத்தின்றலதனைவிட தரித்திரங்கள் வேறேயில்லை, சங்கையில்லாதிருந்தாலுஞ்சபையினின்று சத்தியங்களொருபோதும் செய்யொணாது, தன்கணக்கைப் பெயர்த்தெழுதி மோசஞ்செய்தால் சாகளவுஞ் சுகமில்லை யலைவாரப்பா, பங்கில்வளர் திருவல்லிக் கேணிவாழும் பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே. 9

புருஷனிலாப் பூவைகுடி வாட்கை செய்தாற் புவியிலப கீர்த்தியொடு நிந்தையுண்டாம், புருஷருக்கும்புருடருடன் கலந்துவாழ்ந்தாற் கலக்கமதுவந்தாலுங் கமறிப்போகும், ரோஷமதை யடக்காம லோங்கும்பெண்கள் உலகதனில் படிடியெனும் வேசையாவார், பரிட்சையுடன் திருவல்லிக்கேணிவாழும் பார்த்தனிடசாரதியைப் பணிகுவாயே. 10

முந்நாளிலிரணியன் ராவணனுமற்ற மூர்க்கரெலாங்கெர்வமதால் முழுகிப்போனா, ரந்நாளிற் சிசுபாலன் சகடன்கஞ்ச னழிந்தார்க ளவரவர்க ளகந்தையாலே,

தன்னாலேதானழிந்தான் பத்மாசூரன் தரணியிலேயின்னமுண்டு வனந்தம்பேர்கள், பன்னுமறை திருவல்லிக்கேணிவாழும் பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே.

அரியதமிழ்போதித்து முதவிசெய்து அன்புடனே மர்மமெலா மறிந்துசொன்ன, குருவையினி வஞ்சித்துதுரோகஞ்செய்தாற் குறையாத பிணிவறுமைக் குடியாய்நிற்குந், தருதனைய பெரியோர்க ளுளததைக் காணச் சதாசிவத்தா லருமையெனச் சாற்றலாகும், பருவமதி திருவல்லிக் கேணிவாழும் பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே. 12

சாந்தகுண பெரியோரைச் சேர்ந்தபேர்க்குச் சஞ்சலமும் வினைபிணியு மணுகிடாது, தாழ்ந்துவிதி கெட்டனென்று காலில்வீழ்ந்தாற்றள்ளிவிடப்போகாது தருமமல்ல, சேர்ந்திருந்த குடிவாழ்வைக் கலைத்தபேர்கள் ஜெகமதனி லலைவார்கள் பசாசமாக, பாங்குடைய திருவல்லிக்கேணிவாழும் பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே. 13

கண்டபடி திரிந்தாலுஞ் சுகமிராது காமத்தை யிச்சித்தால் வினைவிடாது, முண்டைகளைச் சேர்ந்தாலும் பௌஷிராது முன்கோப நாய்களுக்குத் துணையிராது, சண்டைமுனை நிற்பார்க்கு வுயிர்நில்லாது சண்டிகளுக்கொருபோதுஞ் சுகமிராது, பண்டிதமாய்த் திருவல்லிக்கேணிவாழும் பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே.

அன்னதா னந்தவிரத் தானமில்லை, ஹரிநாமம்விட
வேறே மந்திரமில்லை, சொன்னவஷ்டா க்ஷரமொழியே
மோக்ஷமாகுந் துணையாகவாழ்வார்கள் முகுந்தராவார்,
தன்னிடத்திற் பொறுமையுற்றால் தருமனாவார் தைரிய
புருடனே தனஞ்செயனேயாவார், பன்னுமறைதிருவல்
லிக்கேணிவாழும் பார்த்தனிட சாரதியைப் பணிகு
வாயே. 15

பொருடேடி யுண்ணுமற் புதைத்து வைத்தாற்
பொருவர்காக்கும் பசாசுமெனச் சொல்லலாகும், இருள
டர்ந்தமூடருக்கு வாழ்விராது யிதக்கமிலாக் கண்டகற்
குச் சுகமிராது, மருள்பிடித்த காமுகற்கு வினைவிடாது
மார்க்கமறு நடப்பவர்க்கு வின்பமிராது, பருவமுறுந்
திருவல்லிக் கேணிவாழும் பார்த்தனிட சாரதியைப்
பணிகுவாயே. 16

மதியாதார் வாசல்வழி மிதிக்கலாமோ மனமில்லா
விடத்திலன்னம் புசிக்கலாமோ, சதிசெய்யுந் துரோகிக
ளைச்சேரலாமோ தமயனையு மனம்நோகப்பேசலாமோ,
வதிதிகளை யுதாசினமாய்ச் சொல்லலாமோ வரசாது
பொருள்கவர்ந்து வலையலாமோ, பதியான திருவல்லிக்
கேணிவாழும் பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே.

கொள்ளையிடுங் கள்ளருடன் கூடலாமோ குடியரு
டன்உற்றவாடி யிருக்கலாமோ, அள்ளியிடும் பிச்சைதனை
விலக்கலாமோ அசலுடமைக் காசைபட்டு அலையலா
மோ, பெண்டுபிள்ளை பொருண்மனையுநம்பலாமோ புவி

யில்வெகு வுபாயமதாய்ப் பிழைக்கவேணும், பள்ளுதமி ழ்த்திருவல்லிக்கேணிவாழும் பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே. 18

மனமறிந்து பொய்சொன்னு லடடாபர்வி வாழ்வ தென்ன வதனுலேமகிட்சியென்ன, வனுசரிப்பானேசர் கட்கு துரோகஞ்செய்தா லாடுபண்ணிக் கோழியைப் போலழிந்துபோவார், தனதான குடித்தனத்தைக்கலை த்தபேர்கள் சாகளவுமலைவார்கள்பசாசமாக, பணிவான திருவல்லிக் கேணிவாழும் பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே. 19

வஞ்சகமே யனுதினமுஞ் செய்துவந்து வாழ்வத னுற் பலனென்ன மகிழ்ச்சியென்ன, கொஞ்சமென்று வெண்ணுத பாவிநெஞ்சே கொடிதானநரகத்தி லழியப் போருய், தஞ்சமென்று நல்லோரைச் சேர்வாயாகில் சகலகலை ஞானமது தரிக்கச்செய்வார், பஞ்சநதி திருவ ல்லிக் கேணிவாழும் பார்த்தனிட சாரதியைப் பணிகு வாயே. 20

நல்லவர்க்குக் கோபமில்லை பெருமையில்லை நற்கதி க்குச்சமயமிது மோட்சமுண்டு, வல்லவர்க்குத் துற்கு ணமே பூஷணங்களாகும் வையகத்திலவர்பெருமை சிரி க்கலாகுஞ், சொல்லினுமோ வவர்கள்குணம் வேறதா குஞ் சோதித்தா னல்லோராற் காணலாகும், பல்லுயிர் களேத்துமல்லிக் கேணிவாழும் பார்த்தனிட சாரதியை ப்பணிகுவாயே. 21

உத்தமர்போல் வேதாந்தம்பேசிப்பேசி யுறுதியுள ர்போல்பூசை செய்யலாகும், கற்றறிமோ ழைகளிவுருத் ராட்சபூணை கலியுகத்தி லிவர்கள்சிலவேஷக்காரர், சித்தி யுள புனிதருக்கு வெறிதானுண்டு திக்கெங்கும் திரிவார் கள் பேயனைப்போற், பத்திவளர் திருவல்லிக் கேணிவா ழும் பார்த்தனிடசாரதியைப் பணிகுவாயே. 22

வாக்கியமே பெரியோர்சொல்வேதமாகும் வரிசை முறை தள்ளாதவரே யோக்யமாகும், யோக்யமுடனட ப்பவரே மறையோராவர் உதவிசெய்யும் புண்ணியரே தெய்வமாவர், யோக்யமுடன்புசித்தென்னயீயாப்பாவி பிணமதனுக் கிடுபிண்டசாதமாகும், பாக்கியமே திருவ ல்லிக் கேணிவாழும் பார்த்தனிட சாரதியைப் பணிகு வாயே. 23

குளித்தென்ன குழைத்தென்னபூசித்தென்னகும் பிட்டுக்கண்மூடி ஜெபித்தாலென்ன, களிப்புறவே கேட் பவருக்கியவேணுங் கருத்தை நிலைநிறுத்தி மெய்யைக் காணவேணும், வொளிததிருந்து பேசுகின்ற பாவிகட்கு வொருபோதுஞ் சுகமில்லை யொழிந்தநெஞ்சே, பளிங்க னைய திருவல்லிக்கேணிவாழும் பார்த்தனிடசாரதியைப் பணிகுவாயே. 24

பார்த்தசாரதிமாலை.
முற்றிற்று.